# விடியல்

The Dawn

மாத இதழ், பொழுது – 25

மே, 2011

vidiyalmagazhine.blogspot.com

vidiyalmagazhine@gmail.com



சிறப்பாசிரியர்
முனைவர் நா. கண்ணன்
கல்லூரி முதல்வர்

ஆசிரியர்
முனைவர் மா. கார்த்திகேயன்
தமிழ்த்துறைத் தலைவர்

இணை ஆசிரியர்
முனைவர் ப. சரவணன்
தமிழ் விரிவுரையாளர்

ஆசிரியர் குழு
தமிழ் விரிவுரையாளர்கள்
அனைவரும்



வெளியீடு:

தமிழ்த்துறை,
கே.எஸ்.ஆர். கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
திருச்செங்கோடு – 637 215,
நாமக்கல் மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.

**www.ksrcasthamizh.blogspot.com**

**www.ksrcas.edu**


## உள்ளடக்கம்


o குறுங்கட்டுரைகள்

அதீத பயங்கள், சூரியன் 02

தடுப்பூசி, ஒன்று முதல் பத்து 03

இந்திய ரயில்வே, சாலைவிதிகள் 04

மண்அரிப்பு, நேர நிர்வாகம் 05

ஆசிரியர்கள் 06

புற்றுநோய், Thomas Alva Edison 07,

Artificial Sweetner, Soft Drinks 08

Carbon in Nature, ஒவ்வாமை 09

காற்று மாசுபாடு 10

உழைப்பே உயர்வு 10

அன்பு, நம்மால் முடியும் 11

வணக்கம் கூறுவது எதற்காக? 15

மூன்று பெண்மணிகள் 15

ராபின் சர்மா 17

தேநீர் தோன்றியது எப்படி? 19

o கவிதைகள்

குரு 06, சிந்தனை 14

என் தாய்மை 07

o மாதம் ஒரு படைப்பாளர்:

எழுத்தாளர் எஸ். ராமகிருஷ்ணன் 12

o தொடர் கட்டுரை (பகுதி – 5)

கண்வலி - சில தீர்வுகள் 18

o தொடர் செய்யுள் (பகுதி – 9)

கே.எஸ்.ஆர். பிள்ளைத் தமிழ் 20

# அதீத பயங்கள்

**வி.மேகலா,**
இரண்டாமாண்டு துகிலியல் மற்றும்
ஆடை வடிவமைப்புத்துறை

இயல்பான பயங்கள் எல்லா மனிதர்களிடமும் உண்டு. ஆனால் சிலர் சிலவற்றைக் கண்டு அதீதமாகப் பயப்படு வதுண்டு. இத்தகைய அதீத பயத்தை ஆங்கிலத்தில் (Phobia) போபியா என்பர். சில போபியாக்கள் வருமாறு:

o ஜெராஸ்கோபோபியா (Geraschophobia) - வயோதிகம்
o அகோராபோபியா (Agoraphobia) - பொது இடங்கள்
o அல்கோபோபியா (Algophobia ) - வலி
o டோபோ போபியா (topophobia) - குறிப்பிட்ட இடம்
o டோக்ஸிகோபோபியா (Toxicophobia) - விஷம் வைத்தல்
o மையூசியாபோபியா (Maieusiophobia) - கர்ப்பம் தரித்தல்
o தலாஸோபோபியா (Thalassophobia) - கடல்
o காலியோபோபியா (Galeophobia) - சுறா
o ஹைப்னோபோபியா (Hypnophobia) - தூக்கம்
o ஒபிடியோபோபியா (Ophidiophobia) - பாம்புகள்
o டேக்கோ போபியா ( Tacophobia) - வேகம்
o அராக்னாபோபியா (Dromophobia) - தெருக்கள்
o எர்கஸியோ போபியா ( Ergasiophobia) - அறுவைசிகிச்சை
o கெரௌனோபோபியா (Deraunophobia ) - இடி
o ஸிடரோட்ரோமோபோபியா(Siderodromophobia) - இரயில்

# சூரியன்

**வி.ஜி.சந்தோஸ்ராஜ்**
இரண்டாமாண்டு
உயிர்த் தொழில்நுட்பத்துறை

கோடை என்றாலே வெயில்தான் நமக்கு நினைவில் வருகின்றது. வெயிலைத் தருவது சூரியன். அச்சூரியனைப் பற்றிய சில புள்ளி விபரங்களை இங்குக் காண்போம்.

சூரியன் மஞ்சள் குறுமீன் வகையைச் சார்ந்த சூரியமண்டலத்தின் மையத்தில் உள்ளது. சூரியனின் அவதானிப்புத் தரவுகள் பின்வருமாறு:

பூமியிலிருந்து தொலைவு – $1.496 \times 10^{11}$ மீ (சராசரி)

காணொளி வெளிச்சம் - -26.8 m

வெளிச்சம் (தனிமுதல் அளவு) – 4 gm

சூரியனின் இயற்பியல் பண்புகள்:

சூரியனின் விட்டம் -1392.000 கி.மீ,
சார்பு விட்டம் (ds /df) - 10 g
மேற்பரப்பளவு - $6.09 \times 10^{12}$ கி.மீ
கன அளவு - $1.41 \times 10^{27}$ மீ $^{3}$
நிறை - $1.9891 \times 10^{30}$ கிகி
பூமி ஒப்புத் திணிவு - 332946
அடர்த்தி – 1411 கி.கி. மீ $^{3}$
பூமி ஒப்பு அடர்த்தி - 0.26
நீர் சார்பான அடர்த்தி - 1.409
மேற்பரப்பு அடர்த்தி -274மீ நொடி $^{-2}$
பூமி சார் மேற்பரப்பு ஈர்ப்பு - 27.94 கி.
மேற்பரப்பு வெப்பநிலை - 5778 K
சூழ்புலத்தின் வெப்பநிலை–$5 \times 10^{6}$ K
ஒளிர்வு -$3.827 \times 10^{26}$ $J5^{1}$
சுற்றுக் காலம் - $2.2 \times 10^{8}$ ஆண்டுகள்

# தடுப்பூசி

**மு. வெங்கடேசன்**
இரண்டாமாண்டு
உயிர்த் தொழில்நுட்பத்துறை

மழை பொழிந்தால் மக்களுக்குச் சட்டென தும்மல், ஜலதோஷம் போன்ற நோய்கள் வந்துவிடும். மேலும், மழை நீடித்தால் கொசுக்களின் அரசாங்கம் ஆரம்பித்துவிடும். அவற்றால் பற்பல நோய்கள் பரவும். பின்னர் காய்ச்சல் விஷக்காய்ச்சல், சிக்கன்குனியா, பறவைக் காய்ச்சல், பன்றிக் காய்ச்சல் என விதவிதமான நோய்கள் வந்து மக்களைப் பதறடிக்கும்.

மருத்துவர் கொடுக்கும் நீண்ட பட்டியலின்படி குறிப்பிட்ட கால இடை வெளியில் தடுப்பூசிகள் போட்டாலும் நோய்கள் நம்மை விடாமல் தொடரும்.

இந்த அனைத்து நோய்களுக்கும் நிவாரணியாக ஒரே ஒரு தடுப்பூசி அடுத்த 5 மாதங்களில் கண்டுபிடிக்கப்படும் என்கிறார் அமெரிக்கா நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆப் ஹெல்த் அமைப்பின் இயக்குநர் மருத்துவர் ***பிரான்சிஸ் காலின்ஸ்.***

இதற்கான ஆராய்ச்சி தோல்வி அடைந்து கொண்டிருந்தது. இதற்குக் கார ணமான ஒவ்வொரு ஆண்டும் வைரஸ்களில் ஏற்படும் மாற்றமே இதற்கு காரணம்

தற்போது இதில் மாற்றம் ஏற்படாத சாத்தியக் கூறுகள் உள்ளன. அதனை வைத்து தடுப்பு மருந்து தயாரிக்கப் பட்டால் அத்தகைய வைரஸ் தாக்குதல்களில் இருந்தும் தப்பிக்கலாம்.

உலகெங்கும் ஆண்டுதோறும் பல லட்சம் மக்கள் இத்தகைய நோய்க்குப் பலியாகின்றனர். தடுப்பூசி கண்டு பிடிக்கப்பட்டால் உலகில் ஆண்டுதோறும் நிகழும் உயிர்ப் பலிகளைத் தடுக்க முடியும்.

◙

# ஒன்று முதல் பத்து

**வி.மேகலா,**
இரண்டாமாண்டு துகிலியல் மற்றும்
ஆடை வடிவமைப்புத்துறை

1. குளவியின் ஆயுட்காலம் 1 ஆண்டு
2. தேனீக்கு இரண்டு இரைப்பைகள் உண்டு.
3. ஆண்சிங்கத்திற்கு 3 வயதில் தான் பிடரிமயிர் வளரும்
4. ஜப்பானியர்கள் 4 என்ற எண்ணை அபசகுணமாக நினைப்பார்கள்
5. யுரேனஸ் கிரகத்திற்கு 5 துணைக்கோள்கள் இருக்கின்றன.
6. யானைக்கு 6 முறை பல் விழுந்து முளைக்கும்
7. மரவட்டை உயிரினத்திற்கு 7 கண்கள் உண்டு.
8. நமது உடல் 8 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
9. ஒன்பது ஆண்டு நிறைவை மண் கவசவிழா என்பர்.
10. இலுப்பைப்பூ 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும்.

◙

# இந்திய ரயில்வே

**எம்.பவித்ரா,**
இரண்டாமாண்டு துகிலியல் மற்றும்
ஆடை வடிவமைப்புத்துறை

- இந்தியாவில் முதன்முதலில் இரயில் வண்டி 16.04.1853 ஆம் ஆண்டு பாம்பே முதல் தானா வரை செலுத்தப்பட்டது. அதன் தொலைவு 33.81 கி.மீ ஆகும்.
- தற்போது இந்திய இரயில்வே துறை உலக அளவில் தொழில் துறையில் நான்காம் இடத்தைப் பிடித்துள்ளது.
- இந்திய இரயில்வே துறை மத்திய அரசைச் சார்ந்ததாகும். தற்போது இந்திய தண்டவாளத்தின் தொலைவு 64215 கி.மீ ஆகும்.
- இந்தியாவில் மட்டும் 7083 இரயில் நிலையங்கள் உள்ளன.
- இந்தியாவில் மட்டும் இரயில்வே துறையில் கிட்டத்தட்ட 80,00,000 பேர் வேலை செய்கின்றனர். இதுவே உலக அளவில் அதிக ஊழியர்கள் வேலை செய்கின்ற நிறுவனமாகும்.

# சாலைவிதிகள்

**டி. பூபாலன்,**
இரண்டாமாண்டு துகிலியல் மற்றும்
ஆடை வடிவமைப்புத்துறை

சாலைப்போக்குவரத்தில் நமது கடமைகள்:

- முக்கியமாக கடைப்பிடிக்க வேண்டிய மூன்று விதிகள் : பச்சை, சிவப்பு, மஞ்சள். இம்மூன்று விளக்குகளும் உணர்த்தும் உண்மை பலருக்குத் தெரியாது.
- சிவப்பு விளக்கு வாகனத்தை நிறுத்துவதற்குப் பயன்படுகிறது.
- மஞ்சள் விளக்கு புறப்பட ஆயத்த நிலையில் இருக்க உணர்த்துக் கின்றது.
- பச்சை விளக்கு புறப்படு என்பதை உணர்துவதற்குப் பயன்படுகிறது.
- இம்மூன்றும் படித்தவர் படிக்காத மக்களுக்கு தினமும் ஐந்து நிமிடம் கற்பித்தால் சாலை விபத்தினைத் தடுக்கலாம்.
- சாலை ஓரங்களில் கவனிக்கப்படாத குப்பைத்தொட்டி மூடப்படாத நிலையில் இருக்கும் பாதாள சாக்கடை இவற்றை அறிவுறுத்தும் வண்ணம் விளம்பர பலகை அமைக்கலாம்.
- பொதுவாகச் சாலையில் செல்லும் போது பள்ளி, பொது சமுதாயக் கூடங்கள் நெரிசலாக இருக்கும் இடங்களில் மெதுவாக 30 கி.மீ வேகத்தில் செல்ல வேண்டும்.
- சாலை ஓரத்தில் நமது இந்திய அரசு பல வண்ண பல வகையான விளம்பரப் பலகைகள் அமைக்கப் பட்டுள்ளது. அதனை விழிப்புணர்வு இல்லாத பாமர மக்களுக்கு நாம் உணர்த்தலாம்.
- சாலை ஓரங்களில் நிழல்கள் அமைப்பதற்காகவும் காற்று மாசுபாட்டினைத் தடுப்பதற்காகவும் மரங்களை அமைக்கலாம்.
- சாலை விபத்து அடையும் மக்களைக் காப்பாற்ற உதவி செய்யலாம்.

# மண் அரிப்பு

**டி. கிரி சங்கர்,**
இரண்டாமாண்டு துகிலியல் மற்றும்
ஆடை வடிவமைப்புத்துறை

நமது நாட்டின் மண் அரிப்பு அதிகமாக காணப்படுகிறது. அனைத்து வளமும் பொருந்திய நம் நாட்டில் நீர்வளமும், நிலம் வளமும் அழிந்து கொண்டுவருகிறன.

நிலத்தைச் சார்ந்து இருப்பது நீர். மண் அரிப்பின் காரணமாக நீர் மாசுபடுகிறது. இதனைத் தடுக்க நாம் அதிகமான மரங்களை நடவேண்டும். பெரிய பெரிய வரப்புகள் அமைத்து பெரிய குளங்கள் வெட்டியும் மண் அரிப்பினைத் தடுக்கலாம். இதன் மூலம் மண் மற்றும் நீர் மாசுபாட்டினையும் தடுக்கலாம்.

நமது வருங்கால இந்தியா வறுமை, விவசாயம் இதையும் தாண்டி நீர்த் தட்டுப்பாடு வருவதற்கான அதிகமான உபரிநீரைச் சுத்திகரிப்பு இம்முறையைப் பயன்படுத்தி நாளைய சமுதாயத்தைக் காப்பாற்றலாம்.

# நேர நிர்வாகம்

**வி.மேகலா,**
இரண்டாமாண்டு துகிலியல் மற்றும்
ஆடை வடிவமைப்புத்துறை

**24 நிமிட நேர நிர்வாகம் :**

8 மணி நேரம் - தூக்கம்
1 மணி நேரம் - காலைக்கடன், குளியல்
1 மணி நேரம் - 3 வேளை உணவு
1 மணிநேரம் -பயணம்
8 மணிநேரம் - வேலை
3 மணிநேரம்- குடும்ப நேரம், நண்பர்கள் நேரம், சுற்றத்தார் நேரம்
1 மணி 36 நிமிடம் நேரம் - தொலைக்காட்சி நேரம்
மீதம் 24 நிமிடம்

இந்த 24 நிமிடம் என்பது மிகவும் முக்கியமானது. ஏனெனில், ஒரு மனிதன் தன் வாழ்க்கையில் முன்னேற வேண்டு மெனில் 24 நிமிடத்தைச் சரிவரப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனைகள் வேண்டும். எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது. எது நடக்கிறதோ நன்றாகவே நடக்கிறது. எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாக நடக்கும். நாம் 24 நிமிடத்தைச் சரியாகப் பயன்படுத்தினால்.

**இந்தியனின் 65 வருட நேரச் செலவு :**

22 வருடம் தூக்கம்
2.75 வருடம் காலைக்கடன், குளியல்
2.75 வருடம் 3 வேளை உணவு
2.75 வருடம் பயணம்
22 வருடம் படிப்பு, வேலை
8.25 வருடம் குடும்ப நேரம், நண்பர்கள் மற்றும் சுற்றத்தார் நேரம்
3.13 வருடம் தொலைக்காட்சி நேரம்
1.34 வருடம் தனிமனித தற்சோதனை நேரம்

# ஆசிரியர்கள்

**எம். சதீஷ்குமார்,**
இரண்டாமாண்டு நுண்ணுயிரியல் துறை



- ஆசிரியர் நமக்குக் கற்றுக்கொடுத்த ஒழுக்கத்தைக் கடைபிடிக்க வேண்டும்.
- ஒழுக்கம் நமது வாழ்விற்கு மிக முக்கியமானது.
- ஆசிரியர் கற்றுக் கொடுத்த பாடங்களைப் படித்து அதை நல்ல முறையில் பின்பற்ற வேண்டும்.
- கற்றுக் கொடுக்கும் ஒவ்வொரு பாடல், கதைகள் அவற்றைப் படித்து வாழ்வில் வெற்றிஅடைய வேண்டும்.
- மாதா, பிதா ஆகியோருக்கு அடுத்ததாகக் குரு அமைந்துள்ளார்.
- ஆசிரியர்களை நாம் என்றும் தெய்வமாகப் போற்றிப் புகழ வேண்டும்
- நம் கல்விக்கண்ணைத் திறந்தவர் ஆசிரியர் ஆவார்.
- ஆசிரியர்கள் இல்லையெனில் எந்த நாடும் வளர்ச்சி அடைய வாய்ப்பே இல்லை
- ஆசிரியர்கள் கற்றுக்கொடுத்த பின்னர் அதனை நாம் மற்றவர்களுக்கும் சொல்லிக்கொடுக்கும் அளவிற்கு முன்னேறியிருக்க வேண்டும்.
- அவர்களை வாழ்த்தி நாமும் வெற்றி அடைய வேண்டும்.

**வசன கவிதை:**

# குரு

**வி. பூங்கொடி,**
முதலாமாண்டு வேதியியல் துறை

***"நாங்கள் நல்நிலையில் வரவேண்டு
மென்று அழைக்கும் ஆசானே!***

***எதிர்காலத் திற்குக்கூட்டிச் செல்லும்
எங்கள் முதற்கண் ஆசானே!***

***நாங்கள் செய்யும் பிழையைத் திருத்தி
உண்மையைக் கூறும் ஆசானே!***

***தாய் எங்களை அழைப்பதுபோல், வாரீர்!***

***நான் கல்வி தருகிறேனென்று அழைக்கும் ஆசானே!***

***அறிவை வளர்க்கக் கல்வி வேண்டுமென்று அந்தக் கல்வியை எங்களுக்கு அளிக்கும் ஆசானே!***

***நாங்கள் என்றும் உங்களை மறவாமல்
இருப்போமென்று உறுதி தருகிறோம்.***

***எறும்பு, தான் எடுக்கும் உணவைப் பகிர்வது போல் உங்களின் கல்வித் திறனை எங்களுக்கும் அளிக்கின்றீர்கள்!***

***உங்களின் தாராள மனத்திற்கு என்றும்
நாங்கள் சரணடைவோம்!"***

# என் தாய்மை

"தாய்மையை அடையும்
வயது எனக்கில்லை!
இருப்பினும் நான் ஒரு
குழந்தையை வளர்த்தேன்
நாட்டுக்காக என் வாசலில்
வளரும் மரத்தைப்
பிள்ளையாகக் கருதி!"

**எம். பிரியதர்ஷினி,**
முதலாண்டு ஆங்கில இலக்கியம்.

# புற்றுநோய்

**கே. இளையவன்,**
இரண்டாமாண்டு
உயிர்த்தொழில் நுட்பத்துறை

புற்றுநோய் என்பது எண்ணிலடங்கா செல்களின் பிரிவு. லத்தீன் மொழியில் கேன்சர் என்பதற்கு crab இதைப்பற்றிய ஆங்காலஜி (onclolgy) என்று பெயர்.

புற்றுநோய்க்கான காரணங்கள்:

1.வைரஸ்
2.புகையிலை
3.புறஊதாக்கதிர்கள்
4.பதப்படுத்தப்பட்ட உணவு

புற்றுநோயின் வகைகள்:


1.Mox-11 - இரத்தபுற்றுநோய்
2.Erb B-2 – மார்பக புற்றுநோய்
3.L-(MYC)– நுரையீரல் புற்றுநோய்
4.Rer – தைராய்டு புற்றுநோய்

35% புகையிலை உபயோகப் படுத்துவதால் புற்றுநோய் வருகிறது. 90மூ நுரையீரல் புற்றுநோய் ஏற்பட்டு மரணத்தில் முடிகிறது.

# Thomas Alva Edison

P.Ranjitha,
B.Sc. Chemistry – I<sup>st</sup> Year

**Edison** is the great inventor who has over 1000 patents and his inventions are in various fields used in our daily life. In his early life he was thought have a learning disability and he could not read till he was twelve and later he himself admitted that he became deaf after pulling up to a train car by this ears. He first could able to turn the attention of the world after inventing phonomgraph. His one of the most popular invention is the Electric Bulb. He also developed the telegraph system. His invention of carbon telephone transmitter developed the carbon microphone which was used in the telephoned till 1980. He also became a prominent businessman and his business institution produced has inventions and marketed the products to the general People.



### Health Effects of the

# Artificial Sweetner

R.TamilSelvi,
B.Sc. Biochemistry IInd Year

American Dr. known for having a sweet tooth. Over the years artificial sweeteness have been introduced to curb the effects of consuming too much natural sweetener, such as sugar.




Artificial sweetners Provide sweetners to foods and beverages, and unlike natural sugars, do not contain many colories and tdo not proniote tooth decay.

However, oncedotal evidence has suggested that aspartame causes other health Problems, including heasaches, gas, confusion, and brain tumors (Robert, 1990; olney and others.) consequently in spite of being of the most thoroughly tested food activitives.

Continues to surround the use of aspartrame is foods and beverages.

# Soft drinks

T.Priyadharsini,
B.Sc. Biochemistry IInd Year

1. It is also called soda, pop, coke, soda Pop, fizzydrink, etc.
2. It is a Non-alcoholic beverage.
3. Type contains carbonated water, a Sweetner and flaroring agents.
4. The sweetner may be sugar high fructose corn syrup, or a sugar substitute. Energy drinks kool-Aid and pure juice not considered to be soft drinks. Other bererages not considered to be soft drinks are hot ehocolak, hot tea, coffee, milk, soft drinks are called “soft” in contrast to “hard drinks” (alcoholic beverages)

Small amount of alcohol may be present in soft drinks. Alcohol content must be less than 0.5% soft drinks may be served chilled or at room temperature. They are rarely baated.

**Content:**

- chemical odor
- Diacetyl Buttery
- Isoamylacetate Banana
- Benzaldehyde Bitter almond.
- Ethyl Propionate Fruity
- Methyl anthranilate Grape
- Limonene Orange

Soft drinks displayed on supermarket shelves. Soft drinks can be made at home by mixing aither suguror dry ingredients woth carbonated water. Carbonated water using a home Carbnonation system. Syrups are commercially sold by companies such as soda-club.

New you may be wondering how a zerwcalorie drink increases the risk of obesity. When you know diet soft drinks contain no calaries, and you eating more foods and thinking that you can increesee the zero-calorie drinks would compensate for the extra calories.

The Hexel of Kidney function participants who drank more than two bottles of diet drinks daily. This probably means such drinks effect the blood filtering ability of kidneys kidney function is not minor tissue. Although the research is still under way.

# Carbon in Nature

M. Vennila,
B.Sc. Biochemistry II nd Year

Carbon is the one element on which all file depends. Carbon can found in May fornes. For example coal, Naturalgas and Petroleum. All compounds which are based aon carbon craphite. Graphite form colour hardness. Plamond Hexagonal grey soft octaheara Transparent Hardest natural substance Chareoal Non-cystatline Black varies.



**Diamond:** The slightly misshapen octahedral shape of this rough diamond Gystal in matrix is typical of the mineral. Their lusts Rous face also indicate that this crystal is from a frimaery deposit. The name of diamond is derivied from the ancient Greek 'admas'.

# ஒவ்வாமை

**ஜி. வெங்கடேசன்,**
இரண்டாமாண்டு
உயிர் வேதியியல் துறை

பாலில் லாக்டோஸ் என்ற வகையான சத்து பொருள் உள்ளது. இவ்வகை சத்து பொருளை பிரித்து உடலுக்கு பயன்படுத்த செய்வது லாக்ட்டோஸ் என்ற ஒரு வகையான வினையூக்கி ஆகும். இவ்வகையான வினையூக்கி இல்லாத குழந்தைகள் பாலை அருந்தும்போது ஒவ்வாமை ஏற்படுகிறது.

# காற்றுமாசுபாடு

## சில தீர்வுகள்

**ஆர். கௌசல்யா,**

இரண்டாமாண்டு

உயிர்த்தொழில் நுட்பத்துறை

நாம் உபயோகிக்கும் வாகனங்களிலிருந்து கார்பன்-மோனோ-ஆக்ஸைடு என்னும் நச்சு வாயு வெளிவருகிறது. அது சுற்றுச் சூழலைப் பெரும் அளவு பாதிக்கிறது. இதனால் பல விதமான நோய்கள் உண்டாகிறது.

இதற்கு அதை கட்டுப்படுத்தலாம். ஆனால், தற்போதோ அந்தளவுக்கு மரங்கள் இல்லை. எனவே, பெட்ரோல் டீசல் ஆகியவற்றால் ஓடும் வாகனங்களைவிட மிதிவண்டியை நாம் பயன்படுத்தினால் சுற்றுச்சூழல் பாதிப்படையாமல் இருக்கும். நோய்கள் பரவுவதையும் தடுக்கலாம்.

தற்போது வாயுவினால் ஓடும் வாகனத்தைக் கண்டுபிடித்தள்ளனர். இது பெட்ரோல், டீசலால் ஓடும் வாகனத்தை விட சுற்றுச்சூழலைக் குறைவாகவே பாதிக்கிறது.

மேற்கூறிய மின்சாரத்தால் ஓடும் வண்டியைப் பயன்படுத்தினால் ஓசோன் படலத்தையும் பாதிப்படையாமல் தடுக்கலாம்.

# உழைப்பே உயர்வு

**எம். நாகேந்திரன்,**

இரண்டாமாண்டு துகிலியல் மற்றும்

ஆடை வடிவமைப்புத்துறை

ஒவ்வொரு இந்திய குடிமகனும், குடிமகளும் அவர்களுக்கென்று கல்வியறிவு, நாவடக்கம், பண்பு போன்ற நற்குணங்களால் மட்டுமே உயர முடியும். "ஒவ்வொரு இந்திய குடிமகனும், குடிமகளும் உழைத்தால் நமது இந்திய நாடானது வல்லரசு நாடாக உயரும்" என்று முன்னாள் குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜெ. அப்துல்கலாம் கூறியுள்ளார்.

கல்வி நமது நாட்டில் உயரவில்லை. கல்வியில் நம் நாடு உயர்ந்தால், பொருளாதாரத்திலும் முன்னேற்றம் காணும்.

இந்திய குடிமகனுக்கும் அவர்களின் இரத்தத்தில் உழைப்பு என்பது விதைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு விதைக்கப்பட்ள்ள விதைகள் இன்னும் பலரின் மூலம் வளரப் படவில்லை. அவ்வாறு வளர்த்தால் நமது இந்திய நாடு ஆனது நிச்சயம் உழைப்பில் சிறந்த நாடாக வளர முடியும்.

ஒவ்வொரு இந்திய குடிமகன், குடிமகள் அவர்களைத் தூண்கள் என்று சொல்வதை விட வருங்கால இதயங்கள் என்று சொல்லுங்கள் துடித்துக்கொண்டே இருப்போம்.

# அன்பு

**ஆர். விஷ்ணுவர்த்தன்,**
இரண்டாமாண்டு துகிலியல் மற்றும்
ஆடை வடிவமைப்புத்துறை

ஒரு பிறப்பு என்பது ஒவ்வொருவருக்கு இறைவன் கொடுத்த வரம் ஆகும். அப்பிறப்பிற்கு முதற்காரணம் பத்து மாதங்கள் தன் வயிற்றுச் சுமையினைத் தாங்கிக் கொண்டு நம்மை இன்று எடுக்கும் தாய் நம்மீது முதல் அன்பு கொள்கின்றாள்.

தான் பெற்றவர்களை நல்ல முறையில் வழிநடத்தும் தந்தை இரண்டாவது அன்பினை வெளிப்படுத்துகிறார்.

நல்ல ஒழுக்கமுறையில் நம்மை கொண்டுச்செல்லும் ஆசான்கள் தன் பெற்றச் செல்வங்களைப் போல் பார்த்துக் கொண்டு ஒருவரை நல்ல முறையில் உருவாக்குவது இவர்கள் மூன்றாவது அன்பினை நம்மீது செலுத்துகின்றார்கள்.

நான்காவதாகத் தம் வாழ்க்கையில் எந்த ஒரு இன்பமோ துன்பமோ வந்தாலும் அதிலும் பாதியினை நான் பெற்றுக் கொள்வேன் என்று சொல்லும் நண்பர்கள் வாழ்க்கையின் போது கிடைத்த ஓர் முக்கிய சொத்து ஆகும்.

ஐந்தாவதாகத் தம் வாழ்க்கையின் போது பாதியில் வரும் தாம்பத்திய வாழ்க்கை முறையில் வருவோர்கள் தங்களை ஈன்று எடுத்த தாயினைப் போல் பார்த்துக்கொள்கிறார்கள்.

இவர்களின் அன்பானது வாழ்க்கையின் கடைசி எல்லை வரை நம்மோடு இருக்கும். பிறகு நம்மை எந்த ஒரு நோய் நொடியும் இல்லாமல் படைத்த கடவுளை நம் அன்பு வைத்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு நம்மீது செல்லும் அன்பினை வாழ்க்கை முழுவதும் நாம் பயன்படுத்தவேண்டும். பயன்படுத்துவோர் வாழ்க்கையில் வெற்றியினை அடை வார்கள்.

◉

# நம்மால் முடியும்

**டி. நித்யா,**
முதலாண்டு ஆங்கில இலக்கியம்

நம்மால் முடியும்! என்ற தன்னம்பிக்கையும், ‘வெற்றி பெறு வேன்’ என்ற மன உறுதியும் ஒருவருக்க இருந்தால் அவர்கள் சாதனையாளர் களாக உலகில் வலம் வரமுடியும்.

***சாதனை புரிந்தவர்கள்:***

இசையில் சாதனை புரிந்த காது கேளாத பீத்தோவன்.

இலியட், ஒடிசி போன்ற அமரகாவியங்களைப் படைத்த கண்தெரியாத ஹோமர்.

ஏழ்மையிலும் தனிமையிலும், இருந்த கணிதமேதை இராமானுசம் எழுவதற்க பேப்பர் வாங்கக் கூடக் காசில்லாமல், அவர் வேலை பார்த்த “போர்ட் ட்ரஸ்ட்’ இல் பார்சல் சுற்றி வந்த பேப்பர்களில் கணித சமன்பாடுகளைப் போட்டுச் சாதனைகள் செய்தவர். குடும்பத்தை விட்டுப் பிரிந்ததால் ஏற்பட்ட ஏக்கம்

அவரை வாட்டியபோதும், அவற்றை எல்லாம் சமாளித்த இராமானுஜத்தின் அந்த மன உறுதிதான் உலகமே வியந்து, இன்றும் விடைகள் கண்டுபிடிக்கப்படாத பல கணித உண்மைகளை உலகிற்க வழங்கியது.

டைனமோ என்னம் மின்விசை உற்பத்திக் கருவியைக் கண்டுபிடித்தவர் மைக்கேல் பாரடே.

ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் அணுசக்தி கண்டுபிடிக்கக் காரணமாக இருந்த அறிவியல் அறிஞர்.

மின்சார விளக்க உலகிற்க தந்த விஞ்ஞான மேதை தாமஸ் ஆல்வா எடிசன். நீங்களும் இவர்களைப்போல் ஆக முடியுமே!

*மாதம் ஒரு படைப்பாளர்*

## எழுத்தாளர் **எஸ். ராமகிஷ்ணன்**

எஸ். ராமகிருஷ்ணன் தமிழ் மொழியின் மிக முக்கியமான நவீன எழுத்தாளர். பல தமிழ் பத்திரிக்கைகளின் மிகுந்த வாசகர் கவனம் பெற்ற எழுத்தாளர் இவர். சினிமாவுக்குத் திரைக்கதையும் உரை யாடல்களும் எழுதியுள்ளார்.

விருதுநகர் மாவட்டத்தின் மல்லாங் கிணர் இவரது சொந்த ஊர். அப்பா சண்முகம் கால்நடை மருத்துவர். அம்மா மங்கையர்கரசி. புத்தகங்கள் படிப்பதில் தீவிர விருப்பம் கொண்டவர். இவரது அண்ணன் டாக்டர் வெங்கடாசலம். இவரது தங்கைகள் கமலா, கோதை, உமா. இவரது தம்பி பாலு.

இவரது தாத்தா வீட்டின் பெயர் பெரியார் இல்லம். சாத்தூரில் உள்ளது. திராவிட இயக்கத்தில் ஆழமான நம்பிக்கை கொண்ட குடும்பம். அடிப்படையில் விவசாயக் குடும்பம் என்பதால் வயலும் கரிசல்காடும், கிணற்றடி நிலங்களும் இவருக்கு இருந்தன. சூலக்கரை, சத்திரப்பட்டி, மல்லாங்கிணர் என்று பழைய ராமநாதபுர மாவட்டத்தின் சின்னஞ்சிறு கிராமங்களில் தன் இளமைக் காலத்தைக் கழித்தார்.

இவரது அம்மா வழித் தாத்தா தீவிரமான சைவ சமயப் பற்றாளர். தமிழ் அறிஞர். அவரது நூலகத்தில் ஷேக்ஸ்பியர், மில்டன் துவங்கி திருவாசகம் வரை தமிழிலும் ஆங்கிலத்திலும் நூற்றுக்கணக்கான புத்தகங்கள் இருந்தன. அவரது ஊர் கோவில்பட்டி. பூர்வீகம் திருநெல்வேலி. தினமும் அதிகாலையில் பச்சைத் தண்ணீரில் குளித்து திருநீறு அணிந்து தேவாரம் பாடி அவரது காலைப்பொழுது துவங்கும். அதனால் கடவுள் இருக்கிறாரா, இல்லையா என்ற குழப்பம் இவர் வீட்டின் அன்றாடப் பிரச்சனையாக இருந்தது.

இரண்டு எதிர்முனைகளுக்கு இடையில் இவரது பால்யம் கழிந்தது என்பதே உண்மை. ஆனால், இரண்டு வீட்டிலும் தமிழ் இலக்கியங்கள், மற்றும் சமூகச் சிந்தனைகள் குறித்த தீவிர ஈடுபாடும் அக்கறையும் இருந்ததால் படிப்பதற்கும்,

அதைப்பற்றி விவாதிப்பதற்கும் அதிக முக்கியத்துவம் தந்தார்கள்.

கல்லூரி நாட்களில் எழுதத் தொடங்கினார். எழுதிய முதல்கதை கபாடபுரம். அது கையெழுத்து பிரதியாக நண்பர்களால் வாசிக்கப்பட்டு தொலைந்து போனது. வெளியான முதல்கதை "பழைய தண்டவாளம் "கணையாழியில் வெளி யானது.



ஆங்கில இலக்கியம் கற்று அதில் டாக்டர் பட்ட ஆய்வு மேற் கொண்டார். ஆனால் ஊர்சுற்றும் அவரது மனது படிப்பைத் தூக்கி எறிய வைத்தது. மனம் போன போக்கில் சுற்றித் திரியும் பழக்கம் பதினெட்டு வயதில் அவருக்குத் தொடங்கியது. இந்தியா முழுவதும் பலமுறை சுற்றிவந்துள்ளார். இந்தியாவின் அத்தனை முக்கிய நூலகங்களுக்கும் சென்று படித்திருக் கிறார்.

இலக்கியவாதிகளைத் தேடித்தேடி சந்திப்பதும், ஊர்சுற்றுவதுமாக பதினைந்து வருடங்கள் அலைந்துள்ளார். சென்னையில் தங்குவதற்கு அறையில்லாமலும் கையில் பணம் இல்லாமலும் பத்தாண்டுகளுக்கு மேலாகத் திரிந்த அவமானங்களும் வலியும் இன்று அவரது எழுத்தின் அடிநாதமாக ஒடிக் கொண்டிருக்கின்றன.

தஸ்தாயெவ்ஸ்கியும், வைக்கம் முகமது பீரும், போர்ஹேயும் மார்க்வெஸ்சும் அவருக்குப் பிடித்தமான எழுத்தாளர்கள். தமிழில் ஆண்டாள், பாரதியார். புதுமைபித்தன், கு.அழகிரிசாமி மற்றும் வண்ணநிலவன் ஆகியோரும் அவருக்குப் பிடித்தமானவர்கள்.

என்ற தன் வாசகி சந்திர பிரபா என்பவரைக் காதலித்து திருமணம் செய்து குழந்தைகள் ஹரி பிரசாத், ஆகர்.

இவர் ஆனந்த விகடனில் எழுதிய 'துணையெழுத்து' தொடர் பரவலான வாசக கவனத்திற்கு உள்ளானது. அதைத் தொடர்ந்து 'கதாவிலாசம்', 'தேசாந்திரி', 'கேள்விக்குறி' ஆகிய தொடர்கள் தமிழில் பரந்த வாசக தளத்தினை இவருக்கு உருவாக்கின.

மகாபாரதம் குறித்த மீட்டுருவாக்க நாவலாக, மகாபாரதத்தின் உப கதாபாத்திரங்களை மையமாகக் கொண்டு இவர் எழுதிய 'உபபாண்டவம்' நாவல் தீவிர இலக்கிய வாசிப்பிற்கு உள்ளான தோடு மலையாளம், வங்காளம் ஆங்கிலம் உள்ளிட்ட மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது.

இவரது சிறுகதைகள் ஆங்கிலம் ஜெர்மன், பிரெஞ்சு, கன்னடம், வங்காளம், ஹிந்தி, மலையாளம் உள்ளிட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

இவரது படைப்புலகம் பற்றி ஆய்வு செய்து தமிழ் ஆய்வாளர்கள் ஐவர் முனைவர் பட்டம் பெற்றிருக்கிறார்கள். 26 பேர் ஆய்வியல் நிறைஞர் பட்டம் பெற்றிருக்கிறார்கள். நான்கு கல்லூரி களிலும் இரண்டு பல்கலை கழங்களிலும் இவருடைய படைப்புகள் பாடமாக வைக்கப் பட்டிருக்கின்றன.

***புதினங்கள்***

உப பாண்டவம், நெடுங்குருதி, ஏழுதலை நகரம், உறுபசி, யாமம், துயில்.

***குழந்தைகள் இலக்கியம்***

கிறுகிறு வானம், ஆலீஸின் அற்புத உலகம், கால்முளைத்த கதைகள்,

***நாடகம்***

அரவான்

***கட்டுரைகள்***

விழித்திருப்பவனின் இரவு, வாக்கியங் களின் சாலை, கேள்விக்குறி, ஆதலினால், இலைகளை வியக்கும் மரம், எப்போது மிருக்கும் கதை, கதாவிலாசம், துணை யெழுத்து, தேசாந்திரி, கோடுகள் இல்லாத வரைபடம், குறத்தி முடுக்கின் கனவுகள், காண் என்றது இயற்கை, செகாவின் மீது பனி பெய்கிறது.

***சினிமா தொடர்பானவை***

அயல்சினிமா, பதேர்பாஞ்சாலி, சித்திரங் களின் விசித்திரங்கள், உலக சினிமா.

***சிறுகதைகள்***

இவர் எழுதிய சிறுகதைகள் அனைத்தும் எஸ். ராமகிருஷ்ணன் கதைகள் என்ற பெயரில் தொகுப்பாக வெளிவந்துள்ளது.

***குறுங்கதைகள்***

நகுலன் வீட்டில் யாருமில்லை.

***இவர் திரைக்கதை, வசனம் எழுதிய திரைப்படங்கள்***

சண்டைக்கோழி, ஆல்பம், பாபா, தாம்தூம், பீமா, உன்னாலே உன்னாலே, கர்ண மோட்சம், மோதி விளையாடு, சிக்கு புக்கு, அவன் இவன், யுவன் யுவதி

***இவர் பெற்ற விருதுகள்***

***1.தமிழக அரசின் விருது 2007,***
***2.கனேடிய தமிழ்சங்க விருது 2008,***
***3.ஞானவாணி விருது 2004,***
***4.முற்போக்கு எழுத்தாளர் சங்க சிறந்த நாவல் விருது 2001,***
***5.சிகேகே இலக்கிய விருது 2008,***
***6.தாகூர் இலக்கிய விருது 2010***

தாகூர் விருது பெறும் முதல் தமிழ் எழுத்தாளர் இவரே ஆவார்) இவரது வலைத்தளம்:

http://www.sramakrishnan.com/

**முனைவர் ப. சரவணன்,**
தமிழ் விரிவுரையாளர்.

***குறிப்பு:***

எழுத்தாளர் எஸ். ராமகிருஷ்ணனின் பல நூல்களும் தமிழின் தலைசிறந்த எழுத்தாளர்களின் முழுப்படைப்புகளும் நம் கல்லூரி நூலகத்தில் உள்ளன.

# சிந்தனை

“உன் எண்ணத்தைக் கவனி!
அது உன் செயலாக மாறுகிறது.
உன் செயலினைக் கவனி!
அது உன் பழக்கமாக மாறுகிறது
உன் பழக்கத்தைக் கவனி !
அது உன் வழக்கமாக மாறுகிறது
உன் வழக்கத்தைக் கவனி!
அது உன் வாழ்க்கையாக மாறுகிறது”

**ர. மோகனா,**
இரண்டாமாண்டு இயற்பியல்

# வணக்கம் கூறுவது எதற்காக?

**வி.எஸ். பவித்ரா,**
இரண்டாமாண்டு இயற்பியல்

பாரதப் பரம்பரையின் மூலைக்கல்லாக விளங்குவது மரியாதை. முதியோரிடமும், மதிப்புக்குரிய பெரியோர்களிடமும் வணக்கம் கூறுவதும் நமது பரம்பரைச் சொத்து.




ஒரு நபரை ஒரு நாளில் முதலாவதாகச் சந்திக்கும் போதும், பலநாட்களுக்குப்பின் காணும் போதும் வணக்கம் அல்லது நமஸ்தே கூறி வாழ்த்தி வரவேற்பது வழக்கம்.

இரண்டு கைகளும் சேர்த்து தலைகுனிந்து வணங்கி 'நமஸ்தே" என்று சொல்லும் போது நாம் பொருளாக்குவது என்னவென்றால் 'ந' என்பது இல்லை என்றும், 'ம' என்பத என்னுடையது என்றும், 'தே' என்பது உங்களுடையது என்றும் ஆகும்.

என்னுடையதாகக் காணும் இவ்வுடல் என் சுயலாபத்துக்கானதல்ல என்றும் உங்கள் சேவைக்கானது என்றும் பொருள்படக் கூறுகின்றோம். தன்னை விட தம் முன் நிற்கும் நபருக்கே உயர்வளிக்கும் பண்பு இதில் காண இயலும்.

○

# மூன்று பெண்மணிகள்

**த. மலர்விழி,**
தமிழிலக்கியம் முதலாண்டு.

இங்கு நான் மூன்று பெண்களைப் பற்றிக் கூற விழைகிறேன். இவர்கள் மூவரும் இந்திய விடுதலைக்கு வித்திட்ட பெருமைக்குரியவர்கள்.

வேலு நாச்சியார், வீரமும் நுட்பமான அறிவும் ஒருங்கே அமையப்பெற்றவர். அவரே ஆங்கிலேயரை எதிர்த்து ஆயுதம் ஏந்திப் போராடிய முதல் பெண்மணி.

இராமநாதபுரத்தை ஆண்ட மன்னர் செல்லமுத்து சேதுபதி-சக்கந்தி முத்தாத் தாள் இவருக்கு கி.பி.1730-ஆம் ஆண்டு ஒரே பெண் மகளாகத் தோன்றியவர் வேலுநாச்சியார். சிவ கங்கை மன்னர் முத்து வடுகநாதர் வேலுநாச்சியாரை மணந்து கொண்டார்.

ஆங்கிலேயர் கி.பி.1772ஆம் ஆண்டு சிவகங்கைச் சீமையின்மீது படை யெடுத்தனர். ஆங்கிலேயருக்கும் முத்து வடுகநாதருக்கும் இடையே கடுமையான போர் நடைபெற்றது. அப்போரில் மன்னர் முத்துவடுகநாதர் வீர மரணமடைந்தார். வேலுநாச்சியார், மைசூர் மன்னர் ஐதர் அலியைச் சந்தித்து ஆங்கிலேயரை எதிர்ப்பது குறித்து கலந்து பேசினார்.

அவருக்கு உதவ விரும்பிய ஐதர் அலி ஐயாயிரம் படைவீரர்களை அவருடன் அனுப்பினார். மருது சகோதரர்களுடன் வீரர்படைக்குத்

தலைமையேற்றுச் சென்ற வேலு நாச்சியார் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டார். அப்போரில் கணவரான முத்து வடுகநாதரைக் கொன்றவர்களை வென்று 1780-ஆம் ஆண்டில் சிவகங்கையை மீட்டார்.

அடுத்து நான் குறிப்பிடும் பெருமைக்குரியவர் கடலூர் அஞ்சலை யம்மாள் ஆவார். இவர் கி.பி.1890 ஆம் ஆண்டு கடலூரில் உள்ள முதுநகரில் எளிமையான குடும்பத்தில் பிறந்து வளர்ந்தார். கி.பி.1921ஆம் ஆண்டு காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத் தைத் தொடங்கிய போதே அஞ்சலை யம்மாளும் தமது பொது வாழ்க்கையைத் தொடங்கினார்.

நீலன் சிலையை அகற்றும் போராட்டம், உப்புக் காச்சல் போராட்டம், மறியல் போராட்டம், தனியாள் அறப்போராட்டம், வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஆகிய அனைத்துப் போராட்டறங்களிலும் கலந்து கொண்டு பல ஆண்டு சிறையில் வாடினார்.

கடலூர் அஞ்சலையம்மாள் மிகச்சிறந்த பேச்சாளராக விளங்கினார். இவரது பேச்சைக் கேட்பதற்காகவே பலர் திரண்டு வந்தனர். நாடெங்கும் வெள்ளையனே வெளியேறு இயக்கம் நடைபெற்ற பொழுது, சென்னை உட்படப் பல நகரங்களுக்கும் சென்று தனது அனல் பறக்கும் பேச்சால் இயக்கத்தின் வளர்ச்சிக்கு உதவினார். குடும்பச் சொத்துக்களையும், குடியிருந்த வீட்டையும் விற்று, விடுதலைப் போராட்டத் திற்காகச் செலவு செய்தார்.

காந்தியடிகள் சிறையில் இருப்பவர் களைப் பார்க்க வந்தபோது, ஒன்பது வயதேயான அம்மாக்கண்ணு, அஞ்ச லையம்மாளின் மகள் என்பதையறிந்து, மிகவும் மகிழ்வுற்று, அச்சிறுமியைத் தன்னுடன் வார்தாவில் உள்ள ஆசிரமத்துக்கு அழைத்துச் சென்று லீலாவதி என்று பெயரிட்டுப் படிக்கவும் வைத்தார். ஒரு முறை கடலூருக்குக் காந்தியடிகள் வந்தபோது அவரைச் சந்திப்பதற்குத் தடைவிதித்திருந்தார்.

அஞ்சலையம்மாள் பர்தா வேட மணிந்து குதிரைவண்டியில் காந்தியடி களை ஏற்றிச் சென்றார். அதனால், காந்தியடிகள் அஞ்சலையம் மாளைத் தென்னாட்டின் ஜான்சிராணி என்ற ழைத்தார்.

மூன்றாவதாக என்னால் குறிப்பிடப் படுபவர் அம்புஜத்தம்மாள். வசதியான குடும்பத்தில் கி.பி.1899ஆம் ஆண்டு சனவரிமாதம் எட்டாம்நாள் பிறந்தார். வீட்டிலேயே தமிழ், ஆங்கிலம், இந்தி, சமஸ்கிருதம் என பலமொழிகளையும் திறம்படப் பயின்றார். அன்னை கஸ்தூரி பாயின் எளிமையான தோற்றத்தினால் கவரப்பட்டு எளிமையாக வாழ்ந்தார். பட்டு, பகட்டு ஆங்கில மோகம் அனைத்தையும் துறந்தார். பல்வேறு கட்டுப்பாடுகள் மிகுந்த குடும்பத்திலி ருந்து தம்மை விடுவித்துக் கொண்டு நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டார்.

வை.மு.கோதைநாயகி அம்மாள், ருக்குமணி லட்சுமிபதி முதலியவர் களோடு நட்புக்கொண்டு பெண்ண டிமைக்கு எதிராகக் குரல் கொடுத்தார்.

மகாகவி பாரதியாரின் பாடல்களைப்பாடி விடுதலையுணர்வை ஊட்டினார்.

காந்தியடிகளால் தத்தெடுக்கப்பட்ட மகள் என்று செல்லமாக அழைக்கப்பட்டார். தன் செல்வாக்கையோ தந்தையின் செல்வாக்கையோ பயன்படுத்த விரும்பாமல் நேர்மையான பெண்மணியாக வாழ்ந்து காட்டினார். தந்தையின் பெயரோடு காந்தியடிகளின் பெயரையும் இணைத்துச் சீனிவாச காந்தி நிலையம் என்ற தொண்டு நிறுவனத்தை அமைத்தார்.

# ராபின் சர்மா

**வீரா. முருகானந்தம்**
தமிழ் வரிவுரையாளர்

ராபின் சர்மா வடக்கு அமெரிக்காவின் சிறந்த சிந்தனையாளர் ஆவார். இவர் முதுகலைப் பட்டம் உட்பட இரண்டு சட்டக் கல்வி பட்டங்கள் பெற்றுள்ளார். 'சர்மா லீடர்ஷிப் இன்டர்நேசனல்' என்ற நிறுவனத்தை வழி நடத்திச் செல்பவர். தனி மனித பண்பு, தலைமைப் பண்பு ஆகிய திறன் வளர்ப்புக் குறித்த பயிற்சியில் அதிவேக மாற்றங்களைக் கண்டவர்.

## *இவரது சிறப்பான நூல்கள்*

ராபின் சர்மா இயற்றிய நூல்களுள் 'தனது பொக்கிஷத்தை விற்ற துறவி', "யார் அழுவார் நீ உயிர் துறக்கையில்' ஆகியன மக்களிடத்தில் சிறப்பான வரவேற்பைப் பெற்றவையாகும்.

மேற்குறிப்பிட்ட இவ்விருநூலின் தமிழாக்கம் வெளிவந்துள்ளன.

## *சர்மாவின் சிந்தனைகள்*

சர்மா தமது நூல்களில் தன்னுடைய எழுத்துக்கு மட்டுமே அழுத்தம் கொடுக்காமல் சிறந்த மேனாட்டுச் சிந்தனையாளர்களின் கருத்துக்களைத் தகுந்த இடங்களில் கோடிட்டுக் காட்டியிருப்பது அவரது பெருந் தன்மையையும், பரந்துபட்ட வாசிப்புத் திறனையும் காட்டுகிறது. தனிமனித போராட்டம், குடும்ப வாழ்க்கை, ஒரு நிறுவனத்தை வழி நடத்திச் செல்வதில் எழும் சிக்கல்கள், இதனைத் தீர்க்கும் வழி முறைகள் முதலியவற்றை மிகவும் அழகான முறையில் சர்மா தமது நூல்களில் குறிப்பிட்டிருக்கிறார்.

"நீ பிறந்ததும் அழுதாய் மகனே, பிரபஞ்சமே மகிழ்ந்தது. உன் வாழ்வை நினைத்து மற்றவர் அழ நீ மகிழ்வோடு சாதல் வேண்டும்" என்று சர்மாவின் தந்தையார் கூறியஅறிவுரையைத் தமது வாழ்வின் நோக்கமாகக் கொண்டு இதனைப் பிறரும் பின்பற்றுமாறு வேண்டுகிறார்.

ஒருவன் வாழ்வில் வெற்றி பெற வேண்டுமென்றால் எல்லாவற்றிலும் கவனம் செலுத்துவதை விடுத்து தகுதியானவற்றில் மட்டுமே கவனத்தைச் செலுத்த வேண்டும் என்கிறார். இதுவே வெற்றிக்கான சிறந்த வழி எனவும் வலியுறுத்துகின்றார்.

"அமைதியான வாழ்க்கை வாழ சில காரியங்களில் மட்டுமே ஈடுபடுத்திக் கொள்ளுங்கள்" என்று ரோமானிய

தத்துவமேதை மார்க்ஸ் ஆரிலியஸ் கூறியிருப்பதைக் கோடிட்டுக் காட்டுகிறார். வெற்றிக்கும், தலைமைப் பண்பினை வளர்த்துக் கொள்வதற்கும் நல்ல எண்ணங்களே காரணமாக அமைகிறது என்ற உண்மையை "உங்கள் எண்ணங் களே உங்களை உலக மாகின்றது" என குறிப்பிடுகின்றார். ஆகவே, தனிமனித பண்புடன், தலைமைப் பண்பை வளர்ப்போம்! இத்தரணிக்கும் புகழ் சேர்ப்போம்!

*மருத்துவத் தொடர் கட்டுரை - 05*

# கண்வலி

## சில தீர்வுகள்

**முனைவர் ப. இராஜேஷ்,**
தமிழ் விரிவுரையாளர்

மனித உறுப்புக்களில் மிக முக்கியமான பகுதி கண் உறுப்பாகும். இவ்வுறுப் புகளில் சிறிதளவு துன்பம் ஏற்பட்டாலும் மனிதர்கள் இயங்க முடியாதநிலை.

அப்படிப்பட்ட கண் உறுப்புக்கு வலி எற்பட்டால், ஏழுவிதமான மருத்துவ முறைகளும், பலவகையான மருந்துப் பொருள்களையும் உபயோகப்படுத்துவதை அறியமுடிகிறது. அவை,

1. ஒரு சங்கு அளவு தாய்ப்பாலுடன் அதே அளவு சீரக தண்ணீரையும் கலந்து தினமும் காலையிலும், மாலையிலும் சிறிதளவு கண்ணில் விடவேண்டும். இவ்வாறு செய்வதால் கண் உறுப்பு குளிர்ச்சி அடைந்து, கண்வலியினை அகற்றுகிறது.

2. மூன்று துண்டு வெங்காயத்தை இடித்து துணியில் கட்டிச் சாறு பிழிந்து அதனைக் கண்ணில் விடவேண்டும்.

3. தேங்காய்ப்பாலைத் (ஒருதம்ளர்) துணியில் கட்டி கண்ணில் சிறிதளவு ஊற்ற வேண்டும். தினமும் நான்கு நேரம் (காலை, மதியம், மாலை, இரவு) ஊற்ற வேண்டும்.

4. சிறிதளவு கறிவேப்பிலையை வேகவைத்து நன்றாக அரைத்துத் துணியில் கட்டிச் சாறெடுத்து மூன்றுதுளி அளவு கண்ணில் ஊற்ற வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு நாளும் மூன்று நேரம் விடவேண்டும்.

5. தாய்ப்பால் (கால்சங்கு அளவு) இரண்டுநேரம் கண்ணில் ஊற்ற வேண்டும். (காலை, மாலை)

6. சோற்றுக் கற்றாழையைத் தீயில் வேகவைத்து மேல்பாகத்தை உரித்துவிட்டு உள்பாகத்தில் உள்ள சதைப்பகுதியைக் கண்ணில் வைத்துக் கட்ட வேண்டும்.

7. வெண்சங்கினை உரைத்துக் கண்புருவத்தில் இரண்டுநேரம் தடவவேண்டும்.

| *மருத்துவம்* | *மருந்துப் பொருளின் அளவு* | *செய்முறை* | *கொடுக்கும் அளவு* | *காலம்* |
|---|---|---|---|---|
| தாய்ப்பால், சீரகத் தண்ணீர் | ஒரு சங்கு தாய்ப்பால் ஒரு சங்கு சீரகத் தண்ணீர் | கலத்தல் | சிறிதளவு | காலை, மாலை |
| வெங்காயம் | மூன்றுதுண்டு வெங்காயம் | சாறுபிழிதல் | சில துளிகள் | காலை, மாலை |
| தேங்காய்ப்பால் | ஒரு தம்ளர் தேங்காய்ப்பால் | சாறுபிழிதல் | ஒரு தம்ளர் | காலை, பிற்பகல், மதியம், இரவு |
| கறிவேப்பிலை | சிறிதளவு கறிவேப்பிலை | சாறுபிழிதல | மூன்று துளிகள் | காலை, மாலை, இரவு |
| தாய்ப்பால் | கால் சங்கு தாய்ப்பால் | - | கால் சங்கு | காலை, மாலை |
| சோற்றுக் கற்றாழை | சிறிதளவு சோற்றுக் கற்றாழை | வேகவைத்தல் | சிறிதளவு | காலை, மாலை |
| வெண்சங்கு | - | உரசுதல் | சிறிதளவு | காலை, மாலை |

## தேநீர் தோன்றியது எப்படி?

**கோ. சத்தியராஜ்,**
வேதியியல் இரண்டாமாண்டு.

தேநீர் (டீ) தோன்றியது எப்படி என்பது குறித்த சுவையான பல செய்திகளை 5 ஆயிரம் ஆண்டு கால தேநீர்'' என்ற தலைப்பிலான ஹாங்காங் புத்தகம் தெரிவித்துள்ளது.



சீனாவின் புகழ்பெற்ற பேரரசர் ஷென்-ஹங் ஒருநாள் தன்னுடைய மலர்த் தோட்டத்தில் தண்ணீர் கொதித்துக் கொண்டிருந்த கொப்பறை அருகில் அமர்ந்து அதை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தார். இது நடந்தது மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு. அந்தக் கொதிநீரில் அதற்கு மேலிருந்த மரத்தின் இலைகள் சில உதிர்ந்து விழுந்தன. அப்படி விழுந்தவுடன் அத்தண்ணீரில் இருந்து நல்ல நறுமணம் எழுந்தது.

அதைக் கூர்ந்து கவனித்த பேரரசர் ஹென்-ஹங் இந்த இலை விழுந்த பகுதியிலிருந்து வெந்நீர் கொஞ்சம் எடுத்துக் குடித்துப் பார்த்தார். அச்சுவை அவரைக் கவர்ந்தது. தேநீர் தோன்றி உலக அளவில் பரவிவிட்டது.

தொடர்செய்யுள்: **கே.எஸ்.ஆர். பிள்ளைத்தமிழ்**

பகுதி – 09 – சிற்றில்

கவிஞர் ***திரு. மோ. ஆ. யுவராசா,***
தமிழ்ப்பேராசிரியர்,
கே.எஸ்.ஆர். கல்வியியல் கல்லூரி.



தாங்கள் மணலில் கட்டிய சிறிய இல்லத்தைச் (மணல்வீட்டை) சிதைக்கவேண்டாம் என்று சிறுமிகள் (கே.எஸ்.ஆர்.ஆகிய) சிறுவனை வேண்டிக்கொள்ளும் பருவம் இது. இப்பருவ நிகழ்வும் 5-ஆம் ஆண்டு முதல் 9 ஆம் ஆண்டுவரை நிகழும்.

"சின்னஞ் சிறுமிகள் நாங்கள் செய்யும்
சிற்றில் சிதையேலு!
சிந்தனை மிக்க விந்தைச் சிறுவா!
சிற்றில் சிதையேலு!
வண்ணச் சிறுமிகள் நாங்கள் செய்யும்
சிற்றில் சிதையேலே!
வானம் போற்றும் ஞானச் சிறுவா!
சிற்றில் சிதையேலே!
பின்னல் சடைசேர் சிறுமிகள் செய்யும்
சிற்றில் சிதையேலே!
பின்னால் வந்து பொன்போல் செய்த
சிற்றில் சிதையேலே!
கன்னல் நெஞ்சக் கனிவாய் ரெங்கா!
சிற்றில் சிதையேலே!
கல்விப் பயிரைக் கண்போல் காப்பாய்!
சிற்றில் சிதையேலே!
செங்கோட் டரசே! சிறுமிகள் எங்கள்
சிற்றில் சிதையேலே!
செம்பொன் மாரி செங்கையில் பொழிவாய்
சிற்றில் சிதையேலே!
பொங்கும் புகழைப் பணிவாய் அணிவாய்
சிற்றில் சிதையேலே!
பொங்கும் கண்ணகி புகழை வளர்ப்பாய்
சிற்றில் சிதையேலே!
தங்கக் கையால் தமிழை வளர்ப்பாய்
சிற்றில் சிதையேலே!
தரணியில் கலைகட் கரணனாய் நிற்பாய்
சிற்றில் சிதையேலே!
சிங்கத் தமிழா! எங்களின் ரெங்கா!
சிற்றில் சிதையேலே!
சிறப்பாய் பொறுப்பாய் அறத்தைக் காப்பாய்!
சிற்றில் சிதையேலே!"

**பின்பக்க அட்டை ஓவியம்:**

**சௌந்தர்யா**

இளங்கலை இரண்டாமாண்டு ஆடைவடிவமைப்பு மற்றும் துகிலியல்துறை